**அகலவத்தை பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

**---------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**-------------------------------**

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

**-----------------------------------------------------------**

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 25 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**---------------------------------------------------**

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**-----------------------------------------------------------------------**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**-------------------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான கெப் வண்டியின் மாதாந்த தவணைப் பணமாகிய ரூபா 88,284 மோட்டார் வாகனக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்படாததால் மீளாய்வாண்டிற்கான சொத்துக் கணக்கும் மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கும் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களது கணக்கீட்டு நடைமுறைகளின் பிரகாரம் நிலையான சொத்துக்களது கூட்டுத்தொகை மூலதனத்திற்கு வருவாயின்

பங்களிப்புக் கணக்கு மற்றும் மூலதனத்திற்கு உதவு தொகைகள் மூலமான பங்களிப்புக் கணக்கு ஆகிய இரு கணக்குகளினதும் கூட்டுத்தொகைக்குச் சமமாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் அவ்விரு கணக்குகளுக்குமிடையே ரூபா 39,994,479 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,819,877 நிதிக் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான தீர்வை வரி வருவாயாகிய ரூபா 1,249,111 குத்தகை வாடகை வருவாயாகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான தீர்வை வரி வருவாய் அதேயளவு தொகையால் குறைத்தும் குத்தகை வாடகை வருவாய் அதேயளவு தொகையால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(உ) முன்னைய ஆண்டின் முத்திரைக் கட்டணத்திற்கான நிதியேற்பாட்டில் ஏற்பட்ட குறைவு ரூபா 2,633,525 ஆகும். இதனை முத்திரைக் கட்டண நிலுவையில் வரவு வைத்து திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்குப் பதிலாக ஆண்டிற்கான வருவாயில் செலவு வைத்தமையால் மீளாய்வாண்டினது வருவாய் நிதிக்கூற்றுக்களில் அதேயளவு தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணமாகப் பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 7,000,000 ஆகியபோதும், அதில் ஆண்டின்போது கிடைக்கப்பெற்றது ரூபா 3,494,670 மாத்திரமேயாதலால் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான முத்திரைக் கட்டண நிலுவை மீதி ரூபா 3,505,330 ஆகியிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அது ரூபா 2,014,194 ஆகக் காட்டப்பட்டமையால் முத்திரைக் கட்டண நிலுவைக் கணக்கின் மீதி ரூபா 1,491,136 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பத்திலுள்ள சிறுவர்களுக்கு பாத அணிகளை வழங்கும் செயற்திட்டத்திற்கென மீளாய்வாண்டில் ரூபா 1,710,000 கிடைக்கப்பெற்றிருந்தது. இது வருவாய்க்கான உதவியின் கீழ் கணக்கிலிடப்பட்டபோதும், அதனுடன் தொடர்புடைய செலவினம் நடப்பாண்டின் செலவினமாகக் கணக்கிலிடப்படாது அதன் காரணமாக ஆண்டிற்கான செலவினமும் கடன்கொடுத்தோரும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,710,000 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(எ) 2016 ஆம் ஆண்டினது பொருள் மெய்மையாய்வின்போது ரூபா 20,625 பெறுமதியான பொருட்கள் இருந்தமை உறுதி செய்யப்பட்டபோதும், அத்தொகை நிதிக்கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(ஏ) 2014 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் (இ) என்பதன் கீழ் பெற வேண்டிய சம்பள மீளளிப்பாகிய ரூபா 1,364,076 வருவாய்க்கான உதவு தொகைக் கணக்கில் மாத்திரம் கணக்கிலிடப்பட்டமையைத் திருத்தஞ் செய்வதற்காக 2015 ஆம் ஆண்டின்போது பெற வேண்டிய வருவாய்க் கணக்கில் ரூபா 1,364,076 வரவு வைக்கப்பட்டு அதேயளவு தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுமிருந்ததால், திரண்ட நிதியக் கணக்கு மீதி ரூபா 1,364,076 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 14,507,559 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 11,038,346 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,516,651 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 8,521,695 அதிகரிப்பு தென்பட்டது.

வருவாயில் ரூபா 6,775,724 அதிகரிப்பும் செலவினத்தில் ரூபா 1,745,971 குறைவும் நிதிப் பெறுபேற்றின் ரூபா 8,521,695 அதிகரிப்புக்கான பிரதான காரணிகளாகும்.

**2. வருவாய் நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை**

மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 2,819 | 2,530 | 640 |
| (ii) | குத்தகை வாடகை | 2,599 | 2,467 | 132 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 154 | 154 | - |

## 2.2 தீர்வையும் வரியும்

(அ) 2016 சனவரி 01 இல் உள்ளவாறான தீர்வை வரி நிலுவை மீதி ரூபா 768,134 ஆகும். இதில் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 424,204 அல்லது 55 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டினது நிலுவையில் மேலும் நிலுவையாகவிருந்த தொகை ரூபா 343,930 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருவாயாகப் பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 1,658,508 ஆகும். மீளாய்வாண்டின்போது ரூபா 1,375,829 அல்லது 83 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. நடப்பாண்டில் பட்டியலிடப்பட்ட தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய மீதி ரூபா 282,679 ஆகும்.

## 2.2.3 பெயர்ப் பலகைகள் / பிரசார விளம்பரங்களுக்கான கட்டணம்

2015 டிசெம்பர் 04 ஆந் திகதிய 1944 ஆம் இலக்க வர்த்தமானியில் அடங்கிய அகலவத்த பிரதேச சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான பிரசார விளம்பரங்களுக்கான கட்டளையின் பிரகாரம், பிரதேச சபையின் எல்லைக்குள் பிரசார விளம்பரங்களை அமைத்தல் மற்றும் காட்சிக்கு வைத்தல் என்பவற்றைப் பரிசிலீத்து கட்டணம் அறவிடப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்படவில்லை. அதற்கமைய, 31 பிரசார விளம்பரங்கள் / பெயர்ப் பலகைகள் என்பவற்றில் இழப்புக்குள்ளான தொகை ரூபா 149,439 ஆகும்.

**2.2.4 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| | | ------------- |
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 2,553,995 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,014,194 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

----------------------------------------

**3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

-----------------------------------------------------------------------------------

(அ) கையிருப்புக் கட்டுப்பாடு

-----------------------------------------

2016 டிசெம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் 50 கல்வனைஸ்ட் குழாய்களது குறைவு தொடர்பான விடயங்கள் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அக்குறைவை மீள நிரப்புவதற்கான நடவடிக்கை 2017 யூன் 13 வரை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) வாகனக் கட்டுப்பாடு

------------------------------------

இடர் முகாமைத்துவ நிலையத்திடமிருந்து 2010 ஆகஸ்ட் 10 ஆந் திகதி பெறப்பட்ட JCB3DX இயந்திரம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமையால் வாகனங்களுக்கான காப்புறுதியையும் வருவாய் அனுமதி பத்திரங்களையும் பெற முடியாதிருந்தது.

(இ) 2010 முதல் முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 43,795 நாட்டைக் கட்டியெழுப்பும் வரி மீதியைத் தீர்த்து வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது அது திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**4.** **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு